# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

MSSRF
Science for Sustainable Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 27/08/2022 | முதல் | 31/08/2022 |
| அறிக்கை எண் : | 068/ 2022 | வெளியீட்டு நாள் : | 26/08/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (21.08.2022 முதல் 25.08.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 31-08-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/08 | 22/08 | 23/08 | 24/08 | 25/08 | தேதி | நாள்-1 27/08 | நாள்-2 28/08 | நாள்-3 29/08 | நாள்-4 30/08 | நாள்-5 31/08 |
| 0.0 | 0.0 | 4.8 | 0.1 | 0.1 | மழை (மி.மீ) | 35 | 34 | 12 | 28 | 14 |
| 34 | 37 | 37 | 38 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 31 | 31 | 31 | 31 |
| 24 | 25 | 25 | 26 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 21 | 21 | 21 | 21 |
| 4 | 5 | 5 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 7 |
| 71 | 64 | 64 | 70 | 62 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 47 | 52 | 48 | 66 | 70 | | 40 | 40 | 40 | 40 | 40 |
| 5 | 17 | 8 | 8 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 12 | 8 | 8 |
| தென் கிழக்கு | மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | மேற்கு | **காற்றின் திசை** | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 31° - 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், வடமேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஆகஸ்ட் 27, 28, 30ம் தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில்

தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**அடுத்த து வாரத்திற்கான ன விரிவாக்கபட்ட ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(26 ஆக-01 செப் 2022) :**

மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக இயல்பை விட கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு.

அதிகபட்ச ச வெப்பநிலை :

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச ச வெப்பநிலையானது பொதுவாக க இயல்பை ஒட்டியே காணப்படும். 26°செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க க வாய்ப்பு.

குறைந்தபட்ச ச வெப்பநிலை :

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : கொய்யா, நெல், கால்நடை.

கொய்யா:

- கொய்யா பழப் பயிரில் தேயிலைக் கொசு கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 50மில்லி வேப்ப எண்ணெய் உடன் 10மில்லி புங்கம் எண்ணெய் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்

நெல்:

- கடந்த சில நாட்களாக ஓரளவு மழை பெய்து வருவதால் நெல் பயிரிடும் விவசாயிகள் விதைப்பு / நடவுக்கு திட்டமிடலாம்.
- 25 நாட்களுக்குப் பின்னர் எடுத்து நடவு செய்ய வேண்டிய தருணங்களில் உள்ள நாற்றுகளை, பிடுங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக டிஏபி உரம் இட்டு, அதிகபட்சம் அன்றிலிருந்து 10 நாட்களுக்குள் நாற்றுக்களை எடுத்து நடவு செய்வதே சிறந்ததாகும்.

கால்நடை:

- தற்போது மாடுகளில் சப்பை நோய் தாக்குதலுக்கான வாய்ப்புகள் உள்ளது.
- இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாக உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது. இதுவும் ஓர் மழைக்கால நோயாகும்.
- நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் மாட்டைப் பிரித்துத் தனியாக ஒதுக்குப்புறமாக வைத்துக் கண்காணிக்க வேண்டும்.
- நோய்க் கண்ட 48 மணி நேரத்தில் மருத்துவரின் உதவியுடன் உடனடியாக மருத்துவம் செய்யவேண்டும் இல்லாவிட்டால் மாடுகள் இறந்து விடும்.
- ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்திற்கு முன்பாகவே அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி மாடுகளுக்குத் சப்பைநோய்க்கான தடுப்பூசி போட வேண்டும்.